மழைநீரை சேமிப்போம் !                                  பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 14.11.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, ஐப்பசி மாதம் 28ஆம் நாள் **14.11.2019 வியாழக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலை தமிழகம், சென்னை | எண்: MT – 1956/2019-20 நாள்: 23-09-2019 | ரூ: 38,640/- |
| | | **மொத்தம்** | **ரூ: 38,640/-** |

மேற்கண்ட தொகை ரூ:38,640/- (ரூபாய்: முப்பத்து எட்டு அறநூற்று நாற்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.61/2019/அ3)

**தீர்மான எண். 1207 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN60 B 4597-க்கான வாகனத்தில் பழுது அடைந்துள்ள கிர்பாக்ஸ்ஸை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | TVS நிறுவனம், தேனி. | 4200/- |
| 2. | ஸ்ரீபருப்பசாமி, பாடி பிட்டிங்ஸ், பெரியகுளம் | 4425/- |
| 3. | சேதுராம் மோட்டார், பெரியகுளம் | 4700/- |

## அலுவலக குறிப்பு:

1. மேற்காணும் பழுது நீக்க பணிக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1ல் உள்ள TVS, தேனி நிறுவனத்தின் தொகையினை ஏற்று பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பழுது சரிபார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுதிக்கலாம் ( ந.க.எண்.4021/2018/எச்1)

**தீர்மான எண். 1208 1, மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 03:

தேனி-அல்லிநகரம் நகாட்சி பொது சுகாதார பிரிவில்இயங்கி வரும் வாகனம்எண். TN60 B 4597-க்கு உரிய வாகனத்தில் கிர்பாக்ஸ் பழுது அடைந்து உள்ளதை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரு.5000/-க்கும், உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்பள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4021/2018/எச்1)

**தீர்மான எண். 1209 1. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 04:

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் டெங்கு மற்றும் சிக்கன் குனியா, மலேரியா நோய்களை பரவாமல் கட்டுபடுத்த 50 தற்காலிக கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள்

கொண்டு Relyon Facility Sevice Pvt Ltd, chennai தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் தற்போது பருவநிலை காலம் தொடங்கி உள்ளதால் அண்டை மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலின் பாதிப்புகள் அதிகரித்து வருவதாலும் தேனி மாவட்ட பகுதிகளிலும் ஆங்காங்கே காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரின் அறிக்கையின்படி இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுத்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திம் பொருட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2571/2017/J1 ல் குறிபிட்டுள்ள படி 300 வீடுகளுக்கு ஒரு கொசு புழு ஒழிப்பு (DBC) பணியாளர் வீதம் நியமனம் செய்து பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி கூடுதலாக 36 DBC பணியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே டெங்கு தடுப்பு பணிக்கு Relyon Facility Sevice Pvt Ltd, chennai நிறுவனத்தின் மூலம் DBC பணியாளர்கள் வழங்கும் நிறுவனத்தின் மூலமாக 36 DBC பணியாளர்களை பெற்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி ஊதிய விகிதத்ததின்படி தொகை ரூ.296/– வீதம் 86 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் கூடுதல் DBC பணியாளர்களுக்கும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் 50 DBC பணியாளர்கள்மூலம் பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இந்நகராட்சி பகுதியில் கொசுவினால் ஏற்படும் டெங்கு, சிக்கன்குனிய மற்றும் மலேரியா போன்ற கடுமையான காய்ச்சல்கள் பரவா வண்ணம் தடுத்திட உடன் நடவடிக்கைகள் எடுத்திட வேண்டி ஏற்கனவே டெங்குதடுப்பு பணிக்கு பணியாளர்கள் வழங்கிய Relyon Facility Sevice Pvt Ltd, chennai நிறுவனத்திடமிருந்து 86 DBC பணியாளர்கள்தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.ச.எண்.143/2019/எச்1)

**<u>தீர்மான எண். 1210 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 05</u>:**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட அல்லிநகரம் கிராமம் வார்டு-B, பிளாக்-4, T.S.No.11/8-ல் உள்ள 7446.20 ச.மீ இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கோரி திரு.D.அரவிந்தன் த/பெ. தாமோதரன் அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்.

மனுதாரர் மனையிடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு உரிய வழிமுறையாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.4344/2019/மம3, நாள்.30.10.2019-ன்படி வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(மம) எண்-50/2019 என எண்ணிடப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தின்படி குடியிருப்பு மனைப்பிரிவு பகுதியில் அமைந்துள்ள சாலைகள், பூங்கா இடம், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம், மன்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை தானபத்திரம் ஆவண எண்.8085/2019, நாள்.15.10.2019-ல் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார்கள். மேலும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் தார் சாலை அமைத்து இருபுறங்களிலும் கழிவுநீர் வாய்க்கால் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மின்கம்பங்கள் அமைப்பதற்கு இந்நகராட்சியில் தொகை ரூ.90,000/- சலான் எண் 1/3112, நாள்.07.11.2019-ல் பணம் செலுத்தி அதன் ரசீது இணைத்துள்ளார்கள்.

எனவே அரசு விதிகளுக்கு உட்பட்டு அனைத்து பணிகளும் செய்து முடித்துள்ளதால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ள சாலைகள், பூங்கா இடம், உள்ளாட்சி பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களை பாதுகாக்கவும், பராமரிக்கவும் நகர்மன்றத்தின் இறுதி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.1902/2019/எப்1.)

**<u>தீர்மான எண். 1211 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 06</u>:**

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினகுரல், கடலூர் | எண்: 504 நாள்: 12-10-2019 | ரூ: 36,000/- |
| 2 | மக்கள் முகம், அருப்புக்கோட்டை | எண்: 383 நாள்: 06-09-2019 | ரூ: 21,400/- |
| 3 | Trinity Mail Tamilagam, மதுரை. | எண்: 017 நாள்: 02-10-2019 | ரூ: 27,090/- |
| | | **மொத்தம்** | **ரூ: 84,490/-** |

மேற்கண்ட தொகை ரூ:84,490/- (ரூபாய்: எண்பத்து நான்கு ஆயிரத்து நானூற்று தொன்னூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.61/2019/அ3)

**<u>தீர்மான எண். 1212 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி